DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register Case No.C.C. 34 of 2024 PW :1

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

Name : திரு. விவேக்

Father's Name : திரு. தனஞ்செயலு

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 27

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.01.2026.

**தேதி..06.01.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 34/2024, அ.த.சா.1, திரு. விவேக், த/பெ. தனஞ்செயலு வயது 55 அவர்களை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செயய்ய அனுமதிக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

1. நான் முனுசாமி கண்டிகை கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 26/11/2023 ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு நான் கழனியில் இருந்து வீட்டிற்கு வரும் போது ஆஜர் எதிரி ஆனந்தசயணம் எங்கள் வீட்டில் இருந்து வெளியே வந்தார் நான் வீட்டிற்கு சென்று எனது பாட்டி ஜீவரத்தினம் என்பவரிடம் என்ன நடந்தது என்று கேட்டேன் அப்போது எனது பாட்டி ஆஜர் எதிரி அனுமதியின்றி வீட்டிற்குள் நுழைந்து எனது பாட்டியை பார்த்து தேவிடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசி எனது பாட்டியின் கழுத்தின் மீது அடித்து நெறிக்கினார் அதன் பின்னர் எனது பாட்டி சேலையை பிடித்ததாக கூறினார் பின்னர் எனது பாட்டியை பார்த்து எப்பொழுதாவது உன்னை கொன்று விடுவேன் என்று மிரட்டினார். பின்னர் நான் எனது பாட்டியை அத்திமாஞ்சேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பின்னர் சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் **அந்த புகார் மனு அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி குறுக்கு விசாரணை**

என் பெயர் எம். விவேக். எனது தந்தை பெயர் தனஞ்செயலு. எனது குடும்ப பெயர் மந்தலப்பூ. நான் எழுப்பூர்வமாக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரில் உள்ள எல்லா விவரமும் எனக்கு தெரியுமா என்றால் சரிதான். எதிரி கூறிய தேவிடியா என்ற வார்த்தையை நான் புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் எனது புகாரில் எனது வீட்டின் தெருவினை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. தனஞ்செயலு என்னும் பெயரில் எங்கள் ஊரில் வேறு யாராவது உள்ளார்களா என்றால் இருக்கிறார்கள். எனது தந்தை தனஞ்செயலுவும் எனது ஊரில் உள்ள தனஞ்செயலுவும் உறவினர்கள் என்றால் சரிதான். எதிரியின் பெயர்

ஆனந்தசயனம் என்றும் நான் பேச்சு மொழிக்கு ஆனந்தசெயலு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கடந்த 26/11/2023 அன்று மரம் வெட்டப்பட்டு சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு எனது பாட்டி சொல்லி தான் தெரியும். புகாரில் எத்தனை அடி என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது பாட்டியின் வயது 65 எதிரி அடித்தால் பாட்டிக்கு கழுத்தில் வலி வரவில்லை என்றால் சரியல்ல. எனது பாட்டியை எதிரி அடித்ததை மீனா என்பவர் பார்த்துள்ளார். எனது பாட்டி வீட்டிற்கும் மீனா என்பவரின் வீட்டிற்கு எவ்வளவு துாரம் உள்ளது என்றால் 40 அடி முதல் 50 அடி துாரம் உள்ளது. எனது பாட்டியின் வீடு தெற்கு திசையை நோக்கி உள்ளது. மீனா என்பவரின் வீட்டின் கதவு தெற்கு திசையை நோக்கி உள்ளது. புகாரில் மீனா என்பவரை பற்றி குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. புகார் நான் எழுத்துப்பூர்வமாக எழுதினேன் என்றால் சரிதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது பாட்டி எந்த தெருவில் வசிக்கிறார் என்றால் விஷ்ணு கோவில் தெரு. என்னை போலீசார் விசாரணை செய்யும் போது ஆதார் கார்டு ஏதாவது கொடுத்தேன் என்றால் இல்லை. சம்பவம் நடைபெறும் போது நான் வீட்டில் இருந்தேன். எனது குடும்பத்தில் எத்தனை நபர்கள் என்றால் அப்பா தனஞ்செயலு, அம்மா சுமதி, எனது தங்கை பெயர் பிருந்தா மேற்குறிப்பிட்ட மூவரும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளார்களா என்றால் சரிதான். ஆஜர் எதிரியும் நானும் உறவினர்கள் என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிக்கும் எனது ஊரான முனுசாமி கண்டிகையில் நிலம் உள்ளது என்றால் சரிதான். எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த வித பேச்சுவார்த்தையும் இல்லை. நான் புகார் காவல் நிலையத்தில் எப்போது கொடுத்தேன் என்றால் கடந்த 27/11/2023 காலை 10.00 மணிக்கு. எனது பாட்டி அவரின் வீட்டில் தனியாக உள்ளார். எனது பாட்டியை அத்திமாஞ்சேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மருத்துவமனையில் சேர்த்த போது இரசீது எதுவும் கொடுக்கவில்லை. எனது குடும்பமும் மீனா என்பவரின் குடும்பமும் உறவினர்கள் என்றால் சரிதான். எதிரியின் வீடு எங்கு உள்ளது என்றால் எனது பாட்டி வீட்டில் இருந்து 40 அடி தொலைவில் உள்ளது. சம்பவம் நடந்தது முதலில் எனது அப்பாவுக்கு தெரியும் பின்னர் எனக்கு

எனது பாட்டி சொல்லி தான் தெரியும்.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒப்பம் /- A. தரணிதரன்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**
**பள்ளிப்பட்டு**